செ.வெ.எண்:47 நாள்: 26.11.2020

**கரூர் மாவட்டம்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கரூர் மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட 108 மருத்துவ அவசர ஊர்தியினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்**

அதன் விபரம் வருமாறு:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னைத்தலைமைச் செயலகத்தில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு 108 மருத்துவ அவசர ஊர்தியினை வழங்கிச்சிறப்பித்தார்கள். அந்த வகையில் கரூர் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட இரண்டு ஊர்திகளில், ஏற்கனவே ஒரு அவசரகால ஊர்தியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். அதனை தொடர்ந்து இரண்டாவது புதிய அவசரகால ஊர்தியினையும் வழங்கியுள்ளார்கள்.

கரூர் நகரத்தில் உள்ள பழைய அரசு தலைமை மருத்துவமணையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சு.மலர்விழி.இஆப., அவர்கள் தலைமையில் இன்று (26.11.2020) புதிய 108 மருத்துவ அவசர ஊர்தியினை கொடியசைத்து துவக்கிவைத்தார்.

இதுவரை கரூர் மாவட்டத்தில் 14 மருத்துவ அவசர ஊர்தி வாகனங்கள் இயங்கிவருகின்றன. அரவக்குறிச்சி, க.பரமத்தி, அரசு மருத்துவக்கல்லூாி, கரூர் பழைய அரசு மருத்துவமனை, வெள்ளியணை, குளித்தலை அரசு தலைமை மருத்துவமனை, மண்மங்கலம், மாயனுார், பஞ்சப்பட்டி, தாந்தோன்றிமலை, தரகம்பட்டி, தோகைமலை மற்றும் உப்பிடமங்கலம் ஆகிய பகுதிகளில் 108 அவசர கால மருத்துவ ஊர்தி வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு சிறப்பாக பணிமேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கரூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து 108 அவசர மருத்துவ சேவை ஊர்தி மூலம் விபத்து, பிரசவம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக மருத்துவ சிகிச்சை பயன்பெற்றுள்ளனர். தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ள வாகனத்தையும் சேர்த்து மொத்தம் 16 மருத்துவ அவசர ஊர்திகள் கரூர் மாவட்டத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது. இன்று தொடங்கிவைக்கப்பட்ட 108 அவரச ஊர்தி கடவூர் ஆரம்பகால சுகாதார மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டத்திற்கு மேலும் கூடுதலான மருத்துவ அவசர ஊர்திகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டு பெற்றுக்கொடுக்க நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பாக ஆண்களும் குடும்ப கட்டுப்பாட்டில் பங்கேற்பது தொடர்பாக ஆண்களுக்கான கருத்தடை சிகிச்சை இருவார விழாவை முன்னிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரச்சரார வாகனத்தையும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.ஏ.ஆர்.காளியப்பன், கரூர் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.அசோகன், சுகாதாரத்துறை இணை இயக்குநர் மரு.ஞானக்கண் பிரேம் நவாஸ், துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மரு.சந்தோஷ்குமார், துணை இயக்குநர் குடும்பநலம் மரு.பிரியதர்ஷினி உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்**